THEN CHITTU ★
FORTNIGHTLY ★

# தேன்சிட்டு

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9
வகுப்புகளுக்கான
மாதமிருமுறை இதழ்

- 16-31 ஆகஸ்ட் 2024
- சிட்டு 3 • இதழ் 42
- விலை : ரூ. 20/-
- சென்னை

- 16-31 AUGUST 2024
- Chittu 3 • Issue 42
- Price : Rs. 20/-
- Chennai




## பலா

பழத்தைப் பற்றி அறிந்துகொள்ள 22ஆம் பக்கம் வாங்க...


யார் சிறப்பு விருந்தினர்? 04


நகரும் குரங்கு 10


அன்பளிப்பு அளித்த எழுத்தாளர் 14 →

# கண்டுபிடியுங்கள்

இந்தக் கட்டங்களில் தமிழின் ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்கள் மறைந்துள்ளன. கண்டுபிடியுங்கள்





| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ம் | மா | லை | க | மே | ணி | ம | ப | சி | அ |
| சா | ப் | பா | டு | ட் | க | ம | சா | ஞ் | ல | கு |
| எ | ன | க் | கு | வே | ண் | தா | டா | மே | ப் | ஓ |
| இ | லை | யி | சோ | று | சொ | ந் | ப | சி | ப | மே |
| பா | கு | ண் | ட | ல | கே | சி | ட் | றி | தி | ம |
| க | னி | ரா | ஜா | ளை | இ | க | டி | ஏ | கா | த |
| சு | பா | தி | ப | யா | ளை | வ | ண | டி | ர | த் |
| வி | தே | ன் | சி | ட் | டு | சீ | ம் | ப | ம் | கு |

விடைகள்: 20ஆம் பக்கம்


www.Padasalai.Net

அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!

# நமது நண்பர்கள்




காலை நேரம் கூவிடும்
கூவி நம்மை எழுப்பிடும்
நாளைத் தொடங்க உதவிடும்
நல்ல சேவல் நண்பரே!
வீட்டைக் காவல் காத்திடும்
அயலவரை விரட்டிடும்
வாலை ஆட்டி வந்திடும்
நாயும் நமது நண்பரே!
வயலில் ஏரை உழுதிடும்
வண்டி இழுத்து உதவிடும்
உயர்ந்த எருவைத் தந்திடும்
காளை மாடும் நண்பரே!
வீட்டில் பாலைக் குடித்திடும்
விரட்டி எலியைப் பிடித்திடும்
வீட்டில் நம்மில் ஒருவராய்
விளங்கும் பூனை நண்பரே!





– வெற்றிச்செழியன்



5 அடிக்குழாய்


9 மனிதக் கணினி என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள்?


15 மயிலாடுதுறை



18 அழகியைக் காணவில்லை


21 பட்டராசு பாவலர்


**தேன்சிட்டு**
Then Chittu Fortnightly

- 16 - 31 ஆகஸ்ட் 2024
- சிட்டு 3 ⋆ இதழ் 42
- 16 - 31 AUGUST 2024
- Chittu 3 ⋆ Issue 42

பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி

பொறுப்பாசிரியர் :
யெஸ். பாலபாரதி

இணையாசிரியர்கள்:
விஷ்ணுபுரம் சரவணன்,
பொன். மூர்த்தி

ஆசிரியர் குழு:
இரா. அருண்பாண்டியன்,
பி. சுகுணாதேவி, வி.விஜயகுமார்,
து. மலர்விழி ஜூலியட்

வடிவமைப்பாளர்கள்:
எஸ். சீனிவாசராவ்,
பி. வன்மிகநாதன், பூ. சேஷாத்ரி

அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்

படைப்புகள் அனுப்ப : thenchittu@tnschools.gov.in ✧ இதழைப் பெற : magazine.subscription@tnschools.gov.in

பதிப்பகம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம். ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, எண் 68, கல்லூரிச்சாலை, சென்னை - 600 006
அச்சகம் : ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட், 69-71/A சிட்கோ தொழிற்பேட்டை, திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம், அஞ்சல் எண் - 600 124

# யார் சிறப்பு விருந்தினர்?

**அந்தக் காடே ஆட்டம் பாட்டத்தோடு ஒரு விழாவுக்குத் தயாரானது. புலியின் பிறந்த நாள் விழாதான் அன்று. புலியின் பிறந்த நாளைக் காடே ஏன் கொண்டாட வேண்டும்?**

அந்தக் காட்டை அழிப்பதற்குச் சிலர் ஆயுதங்களோடு வந்தனர். அப்போது இந்தப் புலி முன்னே சென்று அவர்களை விரட்டியது. அதன்பிறகு அவர்கள் காட்டுக்குள்ளே வரவே இல்லை. அதனால்தான் இத்தனை கொண்டாட்டம். அதுமட்டுமல்ல, இன்று சிறப்பு விருந்தினர் ஒருவரை அழைத்து வருவதாகப் புலி சொல்லியிருந்தது. அது யார் என்று தெரிந்துகொள்ளவும் அனைத்து விலங்குகளும் ஆவலாக இருந்தன.

நரி சொன்னது, "புலிக்கு ஒருநாள் பெரிய முயலை விருந்தாகக் கொடுத்தேன். அதனால் என்னைத்தான் சிறப்பு விருந்தினர் என்று சொல்லும்."

அதைக் கேட்ட ஓநாய், "முயல் எல்லாம் சும்மா. நான் பெரிய மானையே புலிக்குத் தின்னக் கொடுத்தேன். அதனால் என்னைத்தான் சிறப்பு விருந்தினராக எல்லோர் முன்னும் சொல்லும்" என்றது.

இப்படி ஒவ்வொரு விலங்கும், தான் புலிக்கு அளித்த விருந்தைப் பற்றிப் பெருமை பேசின. புலி வரும் சத்தம் கேட்டதும் அனைத்து விலங்குகளும் அமைதியாயின.

பிறந்த நாள் காணும் புலி வந்தது. அதனுடன் வந்த எலியைப் பார்த்து அனைவருக்கும் ஆச்சர்யம்.

"ஏன் இந்தப் புலி, எலியை அழைத்துக்கொண்டு வந்துள்ளது?" என ஒருவருக்கு ஒருவர் கிசுகிசுத்துக் கொண்டனர்.

மேடை மீது ஏறிய புலி, "நண்பர்களே, நீங்கள் எனக்குச் சுவையான விருந்துகளை வைத்துள்ளீர்கள். அவற்றை மறக்கவில்லை. ஆனாலும் இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக நான் அறிவிப்பது இந்த எலியைத்தான்" என்றது.

ஒன்றும் புரியாமல் மற்ற விலங்குகள் பார்த்தன.

"நான் ஒருமுறை வேட்டைக்காரனிடம் மாட்டிக்கொண்டேன். ஒரு கூண்டில் வைத்து என்னைப் பூட்ட முயன்றான். அப்போது இந்த எலிதான் அவனின் விரலைக் கடித்து கூண்டைப் பூட்ட முடியாமல் தடுத்தது. உடனே அவனைத் தள்ளிவிட்டு கூண்டில் இருந்து வெளியே வந்து உயிர் தப்பினேன். என் உயிரைக் காப்பாற்றிய எலிதான் என்றைக்குமே என் சிறப்பு விருந்தினர்" என்று சொன்னது புலி.

அதைக் கேட்டதும் அனைத்து விலங்குகளும் அந்த எலியைப் பாராட்டும் விதமாக ஆரவாரம் செய்தன.

- மகேஷ்




# அடிக்குழாய்

நிலத்திற்கு அடியில் உள்ள நீரை வெளியே கொண்டுவர பல்வேறு முறைகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் அடிக் குழாய் அல்லது அடி பம்ப் (Manual Water Pump). அது எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பார்ப்போம்.

அடிக்குழாய், நேர்மறை இடப்பெயர்ச்சி விசை இயக்கத்தின் அடிப்படையில் இயங்குகிறது. இது நிலத்திற்கு அடியில் உள்ள நீரை மேல்நோக்கி உறிஞ்சி, குழாய் வழியாக நீரை வெளியேற்றுகிறது. இந்த அமைப்பில் ஒரு வால்வு, உந்துதண்டு, உருளை ஆகியவை உள்ளன.

உருளை வடிவக் குழாயின் உள்ளே உறிஞ்சு குழாயின் வழியாக நீர் உறிஞ்சப்படுகிறது. பின்னர் வால்வு உடன் இணைக்கப்பட்டிருக்கும் உந்துதண்டின் உதவியோடு நீர் மேல்நோக்கிக் கொண்டுவரப்படுகிறது. அதே நேரம் உருளை வடிவக் குழாயின் நீர்த்தேக்க வால்வு கீழ் அறையில் அழுத்தம் அளிப்பதன் வழியாகத் திறக்கப்படுகிறது. இது நிலத்தடியில் இருந்து தண்ணீரைத் தொடர்ந்து எடுக்க உதவுகிறது.



## விசைத்தடி [Force rod]

குழாயின் வெளிப்புறமாக உள்ளது நெம்புகோல். இதன் உதவியைக் கொண்டு உருளைக் குழாயில் பொருத்தப்பட்டுள்ள உந்துதண்டு வழியாக நீரை வெளியே கொண்டுவர முடியும்.

## உந்துதண்டு [Piston]

நீர்த் தேக்கத்தில் இருந்து நீரின் அழுத்தத்தின் காரணமாக ஏறி, இறங்கும் உந்துதண்டு வாயிலாக நீர் மேலே கொண்டுவரப்படுகிறது.

## உருளை வடிவக் குழாய் [Cylinder]

அடிக்குழாயில் உந்துதண்டு எளிதில் இயங்கும் வகையில் செங்குத்தாகப் பொருத்தப்பட்டுள்ள உருளை வடிவக் குழாயினுள் அமைக்கப்பட்டுள்ளது.

## நீர்த் தடுப்பு வால்வு [Check valves]

நீர்த்தேக்கத்தில் இருந்து உந்துதண்டு வழியாக நீரைக் கடத்த உதவுவது நீர்த் தடுப்பு வால்வு ஆகும். இது ஒருவழி நீர் கடத்தியாகும். வெளிவந்த தண்ணீர் மீண்டும் உள்ளே செல்வதை இந்தத் தடுப்பு வால்வு நிறுத்தும்.

www.Padasalai.Net

# சொல்லும் பொருளும்

தமிழில் ஆண்பால் பெண்பால் என்பதில் உள்ள 'பால்' என்பது 'பகுதி' என்பதைக் குறிக்கும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இலக்கணம் வகுத்ததைப் போலவே அவர்களின் வயதுக்கேற்ற பெயரும் உள்ளது.

### ஆணின் பருவத்தைக் குறிக்கும் சொற்கள்

| | |
|---|---|
| 7 வயதுக்குள் | பாலகன் |
| 7 - 10 வயதுக்குள் | மீளி |
| 10 - 14 வயதுக்குள் | மறவோன் |
| 14 - 15 வயதுக்குள் | திறலோன் |
| 15 - 16 வயதுக்குள் | காளை |
| 16 - 30 வயதுக்குள் | விடலை |
| 30 வயதுக்கு மேல் | முதுமகன் |

### பெண்ணின் பருவத்தைக் குறிக்கும் சொற்கள்

| | |
|---|---|
| 5 வயதுக்குள் | பேதை |
| 5 - 10 வயதுக்குள் | பெதும்பை |
| 10 - 16 வயதுக்குள் | மங்கை |
| 16 - 25 வயதுக்குள் | மடந்தை |
| 25 - 30 வயதுக்குள் | அரிவை |
| 30 - 35 வயதுக்குள் | தெரிவை |
| 35 - 45 வயதுக்கு மேல் | பேரிளம்பெண் |

# தமிழின் சொல்லாட்சி

தமிழில் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்கிறது தொல்காப்பியம். பொருளில்லாத சொல்லே தமிழில் இல்லை. தமிழின் சொல்லாட்சி அப்படிப்பட்டது. ஓர் எழுத்து ஒரு சொல் தமிழில் பல விரவிக் கிடக்கின்றன. ஆ - பசு, தா - கொடு, தீ - நெருப்பு.

அதேபோல் ஒரு சொல் பல பொருள் சொற்களும் விரவிக் கிடக்கின்றன. அணி - அணிகலன், அழகு, உடுத்து. அறை - சொல், அடி, திரை, வீட்டின் பகுதி. ஆலம் - ஆலமரம், கடல், நஞ்சு, கலப்பை.

ஒரு பொருள் பல சொற்கள் கொண்ட சிறப்பும் தமிழ்மொழி கொண்டுள்ளது. புலி - உழுவை, வேங்கை, வயம், வயமா(ன்), வல்லியம், கொடுவரி, குயவரி, பல்வரி, சிறுவரி. யானைக்குத் தமிழில் 60 பெயர்கள் உள்ளன. குறிப்பாக, யானை (கரியது), வேழம் (வெள்ளை யானை), களிறு, களபம், மாதங்கம், கைம்மா (துதிக்கையுடைய விலங்கு), உம்பர், உம்பல் (உயர்ந்தது).

அதுமட்டுமல்லாது, பருவம், பொழுது, தன்மையைக் குறிக்கவும் தமிழில் சொற்கள் உள்ளன. குறிப்பாகப் பூக்களின் பருவ நிலையைக் குறிக்கும் சொல்லும், மரங்கள் அடையும் தன்மையைப் பொறுத்தும் சொற்கள் தமிழ் இலக்கியங்களில் கட்டப்பட்டுள்ளன.


அரும்பு - அரும்பும் பருவம், மொட்டு - மொக்குவிடும் பருவப் பூ, முகை - மெல்ல முகிழ்க்கும் பூ, மலர் - மலரும் நிலையில் உள்ள பூ, அலர் - மலர்ந்து விரிந்த நிலை, வீ - வாடும் நிலை, செம்மல் - வதங்கும் நிலை.




உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்
மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?
பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்
நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்
14417

# என்ன பறவை?

எண் வரிசையின் படி பறவைகளின் பெயர்களைக் கட்டங்களில் நிரப்பினால், மஞ்சள் நிறமுள்ள கட்டங்களில் அழகான பறவையின் பெயர் வரும். அது என்ன என்று கண்டுபிடி.





# நான்கில் ஒன்றைத் தேர்ந்தெடு

இங்கே இரண்டு சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் முதல் வார்த்தையின் முடிவும், இரண்டாம் வார்த்தையின் ஆரம்பமும் ஒன்றாக இருக்கும். அதைத் தேர்வு செய்து மகிழுங்கள். உங்களுக்காக ஒன்று.

1. BEACH … CHEAP
   a) CH b) ER c) TE d) SE
2. FAL_ _ … _ _ANK
   a) HE b) TH c) PE d) ES
3. SEV_ _ … _ _TRY
   a) LT b) ED c) RD d) EN
4. ENT_ _ … _ _ASE
   a) SH b) RE c) PH d) ER
5. TAS_ _ … _ _ETH
   a) KE b) ER c) TE d) SE
6. VIR_ _ … _ _AGE
   a) US b) TS c) KS d) LS
7. PHO_ _ … _ _VER
   a) TE b) TR c) ER d) NE
8. HUM_ _ … _ _GER
   a) TN b) DE c) KE d) AN



விடைகள்: 26ஆம் பக்கம்

www.Padasalai.Net

# சைக்கிள்

முகிலனுக்குத் தன் அண்ணன் திவாகரை நினைத்து ஒரே கவலையாக இருந்தது. முகிலன் ஐந்தாம் வகுப்பும் திவாகர் ஏழாம் வகுப்பும் படிக்கிறார்கள். அவர்கள் படிக்கும் பள்ளிக்கு வீட்டில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டும். அதற்காக சைக்கிள் ஒன்றும் அவர்களிடம் உள்ளது. ஆனால், திவாகருக்கு மட்டுமே சைக்கிள் ஓட்டத் தெரியும்.

தினமும் அண்ணனே சைக்கிள் ஓட்டுவதால் அவனுக்குக் கால்கள் வலிக்குமே என்று முகிலன் கவலைப்பட்டான். அதற்காக தானும் சைக்கிள் ஓட்ட முயற்சி செய்தான். மிதிக்கும் பெடலுக்கு கால்கள் எட்டியும் ஏனோ அவனால் சைக்கிளை ஓட்ட முடியவில்லை. சிறிது தூரம் செல்வதற்குள் கீழே விழுந்து விடுகிறான்.

அதைக் கவனித்த அண்ணன், "கவலைப்படாதே.. சைக்கிள் ஓட்ட நான் கற்றுத் தருகிறேன்" என்று முயற்சி செய்தான். அப்போதும் தம்பியால் சைக்கிள் ஓட்ட முடியவில்லை.

"அண்ணா, பள்ளிக்குச் செல்லும்போதும் திரும்பும்போதும் நீங்களே சைக்கிள் ஓட்டுகிறீர்கள். உன் கால்கள் வலிக்கும் அல்லவா?" என்று சொன்னான்.


"அடடா... எனக்குக் கால்கள் வலிக்கவில்லை... நீ கவலைப்படாதே" என்று அண்ணன் சொன்னாலும் தம்பியின் முகத்தில் சிரிப்பு வரவில்லை.

"சரி தம்பி... நீ சைக்கிள் ஓட்டிப் பழகும் வரை ஒரு விஷயம் செய்யலாம்" என்று அண்ணன் சொன்னதும் ஆவலோடு பார்த்தான் தம்பி.

"நீ சைக்கிள் பின்னால் உட்காருகிறாய் அல்லவா... அப்படியே உன் கால்களை முன்னே நீட்டி நீயும் பெடலை மிதி. அப்படி மிதித்தால் நான் மெதுவாக மிதித்தால் போதும். என் கால்களும் வலிக்காது. நீயும் உதவி செய்ததைப் போல ஆகிவிடும்" என்றான்.

அதைக் கேட்டதும் தம்பிக்கு உற்சாகம் வந்தது. அண்ணன் சொன்னதைப் போலவே அடுத்த நாள் முதல் சைக்கிள் ஓட்டினார்கள்.

– லாவண்யா



# Bicycle

Mugilan was very much sad about his brother Diwakar. Mugilan was studying in 5th standard while Diwakar was in 7th standard. Both of them had to go to school by travelling 2 kilometers distance. For this, they have a bicycle. Only Diwakar knew to ride the bicycle.

As his brother Diwakar rode the bicycle daily, Mugilan was sad that his legs would ache. Then he also attempted to ride the bicycle. Even though his legs reached the pedal he was not able to ride the bicycle. He fell down after a short distance.

Listening to this, his brother said, "Don't worry. I will teach you riding the bicycle". Though he tried the younger brother was failed to ride the bicycle.

He said, "Bro, you only ride the bicycle to and from the school. Your legs will ache. Won't they?".

"No. No. My legs don't ache. Don't worry." consoled Diwakar. Even then there was no smile in the younger brother's face.

His brother said, "We may do an alternative until you learn to ride the bicycle". The younger brother was curious to know what the alternative was.

The elder brother said, "You are at the pillion. Aren't you? You just stretch your legs and pedal. Then I pedal slowly. My legs will also not ache and you will feel that you helped me".

The younger brother was excited. From the next day onwards, both of them rode the bicycle as the elder one told.

– Lavanya

Translated by Meenakshi D



# மனிதக் கணினி என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள்?

உங்களிடம் 2 x 2 எவ்வளவு எனக் கேட்டால் 4 என சரியாகச் சொல்வீர்கள். 10 x 10 எவ்வளவு எனக் கேட்டால் 100 என்பதைக் கூடச் சொல்லி விடலாம். 76,86,36,97,74,870 × 24,65,09,97,45,779 என்ற இந்த இரு 13 இலக்க எண்களுக்கான விடையை உங்களால் எளிதாகச் சொல்ல முடியுமா? இதற்கான விடை 1,89,47,66,81,77,99,54,26,77,37,30 என 28 நொடிகளில் சரியாகச் சொன்னவர் இந்தியக் கணித மேதை சகுந்தலா தேவி. ஒரு கணிதக் கேள்விக்கு விடை சொல்ல இவர் எடுத்துக்கொண்டது 50 விநாடிகள். ஆனால், அந்த விடை சரிதானா என்று சோதிக்க கணினி எடுத்துக்கொண்ட நேரம் 4 நிமிடங்கள். இதனால்தான் அவரை மனிதக் கணினி (Human Computer) என்று கூறுகிறோம். சிறுவயது முதலே கணிதத்தின் மீது ஆர்வம் கொண்ட சகுந்தலா தேவி கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றார்.

## பிட்டா எனும் பறவையைப் பற்றிச் சொல்லுங்களேன்?

பிட்டா பறவை (Pitta bird ) என்பதற்குத் தெலுங்கு மொழியில் சிறிய பறவை என்று அர்த்தம். இந்தப் பறவையைத் தமிழில் ஆறு மணிப்பறவை என்று குறிப்பிடுகிறார்கள். இது, குளிர் காலத்தில் இமயமலையில் இருந்து இடம்பெயர்ந்து இங்கு வருகிறது. கோடை காலத்தில் மீண்டும் இமயமலைக்கே செல்கிறது. இது, குப்பைகளில் உள்ள பூச்சிகளையும் முதுகெலும்பு இல்லாத உயிரினங்களையும் உணவாக உட்கொள்கிறது. இனிமையான ஒலி எழுப்பக்கூடியது.



## மனிதர்களைப் போல மரங்களும் பேசிக்கொள்ளுமா?

நம்மைப் போல அப்படியே பேசிக்கொள்வது இல்லை. ஆனால், சமீபத்திய ஆய்வில், காடுகளில் இருக்கும் மரங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருக்கும் என அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். இப்படி மரங்கள் தொடர்பில் இருக்க உதவியாய் இருப்பது பூஞ்சைகள் (Fungus). ஹைபா (Hyphae) எனப்படும் பூஞ்சைதான் மரங்களை ஒன்றிணைக்கிறது. ஒளிச்சேர்க்கையில் கிடைக்கும் சர்க்கரையை மரங்கள் பூஞ்சையோடு பகிர்ந்துகொள்கின்றன. மண்ணில் இருந்து கிடைக்கும் நைட்ரஜன், பாஸ்பரஸை பூஞ்சைகள் மற்ற மரங்களோடு பகிர்கின்றன. இதை ஆங்கிலத்தில் Symbiotic Relationship (ஒன்றி வாழ்தல்) என்பார்கள்.



## மிகவும் பழமையான பல்கலைக்கழகம் எது?

ஐந்தாம் நூற்றாண்டில் குப்த பேரரசர்களால் பீகார் மாநிலத்தில் நாளந்தா பல்கலைக்கழகம் கட்டப்பட்டது. உலகிலேயே தங்கும் விடுதியுடன் கூடிய முதல் பல்கலைக்கழகமாகத் திகழ்வதோடு, இன்றும் இயங்கி வருகிறது. அக்காலத்திலேயே, உலகின் பல நாடுகளில் இருந்து மாணவர்கள் இங்கு வந்து தங்கிப் படித்தனராம். மிக உயரமான ஸ்தூபிகளும் பல அடுக்கு மாளிகைகளுடன் செங்கற்களால் கட்டப் பட்ட அழகான கல்வி நிறுவனமாகத் தோற்ற மளித்தது. 5 முதல் 12ஆம் நூற்றாண்டு வரை சிறப்புடன் விளங்கியது. சில படையெடுப்புகளுக்குப் பின் நூலகமும் கட்டடமும் சேதம் அடைந்தன. அவை, தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ளன.





## பருப்பு ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூரில் பருப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைந்துள்ளது. நாட்டின் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்தவும், பருவகாலப் பயிர்களான உளுந்து, மொச்சை, ராஜ்மா போன்ற பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், புதிய தொழில் நுட்பத்தை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கவும் இந்நிலையம் ஆய்வு செய்கிறது.

## கேளுங்கள்!


உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.



முகவரி :

'அறிவோம் ஆயிரம்',
'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006.
மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in


# நகரும் குரங்கு



## தேவையான பொருள்கள் :

- குரங்கின் வடிவப் பட அட்டை – 2
- ஐஸ்கிரீம் குச்சி
- சிறிய இரப்பர் பேண்ட்
- பெரிய இரப்பர் பேண்ட்
- கத்திரிக்கோல்
- உறிஞ்சுகுழல் – 2 செ.மீ











## செய்முறை:

- ஐஸ்கிரீம் குச்சியின் ஓரத்தில் உறிஞ்சுகுழலைச் சிறிய இரப்பர் பேண்ட் கொண்டு படம் 1-இல் உள்ளவாறு கட்டிக்கொள்ளவும்.
- பெரிய இரப்பர் பேண்டை ஒரு பக்கம் வெட்டிக்கொள்ளவும்.
- பின் உறிஞ்சுகுழலின் உள் வெட்டிய இரப்பர் பேண்டை படம் 2-இல் உள்ளவாறு செலுத்தவும்.
- இருபுறமும் முடிச்சுப் போட்டுக்கொள்ளவும்.
- அட்டைத் தாள் குரங்கை, படம் 3இல் காட்டியவாறு ஐஸ்கிரீம் குச்சியில் ஒட்டிக்கொள்ளவும்.
- படம் 4-இல் உள்ளவாறு இருபுறமும் இரப்பரை இழுத்துப் பிடிக்கும்போது, மேலிருந்து குரங்கு கீழே மெதுவாக நகர்வதைப் பார்க்க முடியும்.




www.Padasalai.Net

- இது இலவச தொலைபேசி எண்
- இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்
- உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும் இந்த எண்ணிற்கு அழையுங்கள்




சைல்டு லைன் 1098
(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)

# கண்டுபிடி

கீழே உள்ள கட்டங்களில் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களைத் தமிழில் நிரப்பினால் ஒரு பறவையின் பெயர் கிடைக்கும்.

[A]



















# எப்படி?




ஒரு வாளி நிறைய பால் உள்ளது. ஒருவர் வந்து தனக்கு 2 லிட்டர் பால் வேண்டும் எனக் கேட்கிறார். ஆனால், 8 லிட்டர் கொள்ளளவு பாத்திரமும் 5 லிட்டர் கொள்ளளவு பாத்திரமும் மட்டுமே உள்ளன. இவற்றை வைத்து எப்படி 2 லிட்டர் பாலை அளப்பது? கண்டுபிடியுங்கள்!

[B]


# சரியானதைப் பொருத்துக

[C]





[1]

இங்கே இரண்டு நாடுகளின் தேசியக் கொடிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு பகுதி மட்டும் விடுபட்டுள்ளது. அதன் கீழ் உள்ள நான்கு துண்டுகளில் எது பொருத்தமானது எனக் கண்டுபிடியுங்கள். மேலும் அவை எந்த நாட்டின் தேசியக் கொடிகள் என்றும் கண்டுபிடியுங்கள்.



[2]




விடைகள்: 20ஆம் பக்கம்


# மாணவர் கலைவ




**அ. சுவேதா,**
7ஆம் வகுப்பு, சென்னை மேல்நிலைப் பள்ளி, எம்.ஜி.ஆர். நகர், சென்னை




**கு. குமரன்,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கட்டமுத்துப்பாளையம், கடலூர்




**மு. இர்ஃபானா ஜாஸ்மீன்,**
7ஆம் வகுப்பு, பசுபதீசுவரா நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கரூர்



**ஈ. சுதர்ஷினி,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அழகாபுரி, தேனி





**அ. திவாகர்,**
8ஆம் வகுப்பு, அரசு ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளி, புதுப்பாக்கம், செங்கல்பட்டு





**மு. காவியா,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தொப்பம்பட்டி, கோயம்புத்தூர்






**ப. நந்திதா,**
6ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, பள்ளிபாளையம், ஈரோடு





**கே. ஜெகதீஷ்,**
8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வீரசெட்டிஏரி, கிருஷ்ணகிரி






**கி. சௌமியா ஸ்ரீ,**
8ஆம் வகுப்பு, நகராட்சி நடுநிலைப் பள்ளி, நாராயண நகர், நாமக்கல்







**கே. கரிஷ்மா,**
7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடு[illegible] பள்ளி, புளியம்பட்டி, மதுரை

# ர்
# ண்ணம்







**ஜி. ராகுல்,**


8ஆம் வகுப்பு, அரசு
உயர்நிலைப் பள்ளி,
பொன்மனை,
கன்னியாகுமரி





**பா. சத்யஸ்ரீ,**

7ஆம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி
ஆதமங்கலம், நாகப்பட்டினம்





**எஸ். பிரித்திகா,**


8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி,
சேரன்குளம், திருவாரூர்





**இ. சுப்பிரமணியன்,**


9ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி,
மேலகரம், தென்காசி





**இ. ஸ்ரீமதி,**


8ஆம் வகுப்பு, அரசு பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, திமிரி,
இராணிப்பேட்டை





**க. சக்திவேல்,**

8ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்
பள்ளி, கீழ்புதுப்பாக்கம், திருவண்ணாமலை





**மோ. ஜீவா,**

9ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி,
புள்ளம்பாடி, திருச்சி



**க. ஹரினேஷ்,**

7ஆம் வகுப்பு, அரசு
மேல்நிலைப் பள்ளி,
காத்தாடிமட்டம், நீலகிரி





**கா. முத்துமாரி,**

8ஆம் வகுப்பு, ஊராட்சி
ஒன்றிய நடுநிலைப்
பள்ளி,
ம.துரைச்சாமிபுரம்,
விருதுநகர்



படைப்புகளை அனுப்பும் மாணவர்கள் தங்களின் பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மாவட்டம், தொலை பேசி எண், புகைப்படம் போன்ற விவரங்களையும் மறக்காமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

முகவரி : மாணவர் கைவண்ணம்,
**தேன்சிட்டு சிறார் இதழ்**
8வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006.
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

# அன்பளிப்பு அளித்த எழுத்தாளர்






தமிழ் எழுத்தாளர்களில் தனக்கு எனத் தனி இடம் பிடித்தவர் கு. அழகிரிசாமி. குழந்தைகள் மீது மிகுந்த அன்பு பாராட்டியவர். பெரியவர்களுக்காக அவர் எழுதிய பல கதைகளில் சிறுவர்களை அற்புதமாக எழுதியிருக்கிறார். ஓர் இளைஞர், தன் வீட்டுக்கு வரும் ஐந்து சிறுவர்களில் இரண்டு பேரிடம் மட்டும் அதிக அன்பு செலுத்துவார். அது எவ்வளவு பெரிய காயத்தை மற்ற சிறுவர்களுக்குள் ஏற்படுத்தும் என்பதைக் கதையாக எழுதியிருக்கிறார். அக்கதையின் பெயர் 'அன்பளிப்பு'. அந்தக் கதையை வெறுமனே கதை என்று கடந்துவிட முடியாதபடி கட்டிப் போட்டுவிடும் எழுத்துக்குச் சொந்தக்காரர் அழகிரிசாமி. இந்தக் கதை அடங்கிய நூலுக்குத்தான் இவருக்குச் சாகித்திய அகாதெமி விருது அளிக்கப்பட்டது.


இவர் எழுதிய நூற்றுக்கணக்கான கதைகளில் இவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது 'ராஜா வந்திருக்கிறார்' எனும் சிறுகதைதான். அந்தக் கதையையும் குழந்தைகளை மையப்படுத்தியே எழுதியிருக்கிறார். ஐம்பதாண்டுகளுக்கு முன் எழுதிய கதை என்றாலும் இப்போது படித்தாலும் புதிய கதை போன்று இருக்கும். சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் தன் முத்திரையைப் பதித்திருக்கிறார் அழகிரிசாமி.

சிறார் இலக்கியத்திலும் இவரின் எழுத்துகள் பாய்ந்துள்ளன. மூன்று பேர், காளி வரம் ஆகிய இரண்டு சிறார் நூல்களை எழுதியுள்ளார். மாயாஜாலம் மிக்க கதைகளாகவும், யதார்த்த உலகை படம்பிடித்துக் காட்டுவதாகவும் அக்கதைகள் இருப்பது சிறப்பு.

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள இடைச்செவலில் 1923ஆம் ஆண்டு பிறந்தார். ஆசிரியர், எழுத்தர், பத்திரிகையாளர் எனப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டார். 1970ஆம் ஆண்டு மறைந்தார். ஆனாலும், தன் கதைகளின் வழியே தொடர்ந்து நம்மோடு உரையாடிக் கொண்டே இருக்கிறார் அழகிரிசாமி.

# முன்னோடி எழுத்தாளர்






மலையாள இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் எம்.டி.. வாசுதேவன் நாயர். இவர் கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில் உள்ள கூடலூர் எனும் கிராமத்தில் 1933ஆம் ஆண்டு பிறந்தார். இந்தியாவில் இலக்கியத்துக்கு வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றான 'ஞான பீடம்' விருதைப் பெற்றுள்ளார். இவரின் பெரும்பாலான கதைகள் மலையாளக் குடும்ப அமைப்பையும், பண்பாட்டையும் உணர்த்துவதாக இருக்கும்.

மலையாளத் திரைத்துறையிலும் இவரது பங்கு அளப்பறியது. ஒரு வடக்கன் வீரகதா, கடவு, சடயம், பரிணயம் ஆகிய படங்களுக்காகச் சிறந்த திரைக்கதை ஆசிரியருக்கான தேசிய விருதைப் பெற்றுள்ளார். இதில் கடவு எனும் திரைப்படம் இவரே இயக்கியது. வேறு சில திரைப்படங்களையும் இயக்கி உள்ளார்.

தொடக்கத்தில் கவிதை எழுதத் தொடங்கிய வாசுதேவன், மிகச் சீக்கிரமே உரைநடைப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். நாவல், சிறுகதை, கட்டுரை என எழுத்தின் வெவ்வேறு தளங்களில் பயணித்த வாசுதேவன், சிறார் இலக்கியத்திலும் பங்களிப்பு செய்யத் தவறவில்லை. மாணிக்கக் கல், தயா, தந்திரக்காரி போன்றவை இவரது சிறார் இலக்கியப் படைப்புகள். இவற்றை இலட்சக்கணக்கான சிறுவர்கள் விரும்பி வாசித்துப் பாராட்டியுள்ளனர்.

www.Padasalai.Net

# மயிலாடுதுறை




'சோழ நாடு சோறுடைத்து' எனப் புகழப்படும் சோழ மண்டலத்தைச் சேர்ந்தது மயிலாடுதுறை. முன்பு, மாயூரம், மாயவரம் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டது. 1982ஆம் ஆண்டுதான் 'மயிலாடுதுறை' என்று குறிப்பிட்டு அரசாணை வெளியிடப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தில் 29 ஊர்கள் மட்டுமே நகரங்களாக அறிவிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று மயிலாடுதுறை.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்த மயிலாடுதுறை 2020ம்ஆம் ஆண்டு தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. சுமார் 1,169.3 ச.கி.மீட்டர் பரந்து விரிந்துள்ள இம்மாவட்டத்தின் முதன்மைத் தொழில் விவசாயம்தான்.

தமிழின் சிறப்பு வாய்ந்த இலக்கியமான 'சிலப்பதிகாரத்தில்' மிக முக்கிய ஊராக இடம்பெறும் பூம்புகார் இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. அதன் சிறப்பைச் சொல்வதற்காக அங்கு பூம்புகார் கலைக்கூடம் பண்பாட்டுச் சுற்றுலா இடமாக மாற்றப்பட்டுள்ளது.

நம் தேசத் தந்தை காந்தியடிகள் மூன்று முறை இம்மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார். காந்தியடிகளே பாராட்டிய விடுதலை மகள் தில்லையாடி வள்ளியம்மையின் பூர்வீக ஊரான தில்லையாடி அமைந்திருப்பதும் இம்மாவட்டத்தில்தான். வள்ளியம்மை நினைவு மண்டபத்தை எழுப்பி கௌரவித்துள்ளது தமிழ்நாடு அரசு.

மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளையும் மயிலாடுதுறை நாடாளுமன்றத் தொகுதியையும் உள்ளடக்கியது இம்மாவட்டம்.

1877ஆம் ஆண்டில் சென்னையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் இரயில் பாதை அமைக்கப்பட்டபோது மயிலாடுதுறை முக்கிய இரயில் சந்திப்பாக இருந்துள்ளது.

**சுற்றிப் பார்க்க:**

காவேரிப் பூம்பட்டினம் என்று புகழப்படும் பூம்புகார், மயிலாடுதுறையில் இருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. பிரமாண்டமான டேனிஷ் கோட்டை அமைந்திருக்கும் தரங்கம்பாடியும் இம்மாவட்டத்தில் தான் உள்ளது.

மயிலாடுதுறை, திருமுல்லைவாசல், திருவெண்காடு, வைத்தீஸ்வரன் கோவில், சீர்காழி, திருக்கடையூர் உள்ளிட்ட ஊர்களில் புகழ்பெற்ற ஆன்மிகத் தலங்கள் உள்ளன.

இம்மாவட்டத்தில் பிறந்தவர்களில் பலர் பல்வேறு துறைகளில் சிறப்புடன் திகழ்ந்துள்ளார்கள். கம்பராமாயணம் எழுதிய கம்பர் மயிலாடுதுறை அருகே உள்ள தேரழுந்தூரில் பிறந்தவரே. இந்திய நூலகத் தந்தை என்று போற்றப்படும் எஸ்.ஆர். ரெங்கநாதன், தமிழில் முதல் நாவலை எழுதியவரும் நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்தவருமான மாயூரம் வேதநாயகம், நந்தனார் சரித்திரம் எழுதிய கோபாலகிருஷ்ண பாரதி ஆகியோர் மயிலாடுதுறையில் பிறந்தவர்களே.


மாயூரம் வேதநாயகம்


கல்கி கிருஷ்ணமூர்த்தி


சீர்காழி கோவிந்தராஜன்

சோழ மன்னர் ராஜராஜ சோழனின் வாழ்வை மையமாக வைத்து எழுதிய நாவலான பொன்னியின் செல்வனை எழுதிய கல்கி கிருஷ்ணமூர்த்தி, தன்னம்பிக்கை எழுத்தாளர் எம். எஸ். உதயமூர்த்தி, புகழ்பெற்ற பாடகர் சீர்காழி கோவிந்தராஜன், அவரது மகன் சிவசிதம்பரம் உள்ளிட்டவர்களும் இம்மாவட்டத்தில் பிறந்து பெருமை சேர்ப்பவர்களே.


டேனிஷ் கோட்டை



பூம்புகார் கலைக்கூடம்

www.Padasalai.Net

# மேற்குத்தொடர்ச்சி மலை

**சு**ற்றுலா செல்லலாம் என்றதுமே நம் மனதில் தோன்றும் ஊரின் பெயர் ஊட்டி. அழகான மலையும் இதமான குளிரும் நமக்கு மிகவும் பிடிக்கும். மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரின் ஒரு பகுதியே ஊட்டி. நம்மை மயக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரைப் பற்றிய சுவாரசியமான சிலவற்றைப் பார்ப்போம்.

- இந்தியாவின் மேற்குப் பகுதி மாநிலங்களில் அதிகளவில் இம்மலைத் தொடர் இருப்பதால் மேற்குத்தொடர்ச்சி மலை என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் மிகப் பெரிய பல்லுயிர்ப் பெருக்க மண்டலமாகத் திகழ்வது மேற்குத்தொடர்ச்சி மலைத் தொடர். இது மகாராஷ்டிர மாநிலத்தில் தொடங்கி குஜராத், கோவா, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்கள் வரை பரவியுள்ளது.

- உலகளவில் மிகவும் முக்கியமான புவியியல் அம்சமாகக் கருதப்படும் இம்மலை அதிகளவில் கரியமில வாயுவை ($CO_2$) எடுத்துக் கொள்கிறது. இதனால் இயற்கையைப் பாதுகாக்கும் பல்லுயிர்ப் பெருக்க மண்டலங்களில் இது நான்காவது இடத்தில் உள்ளது.

- இந்தியாவின் மேற்கு மாநிலங்களின் மழைப் பொழிவிற்கு இம்மலையே முக்கியக் காரணியாக விளங்குகிறது.




இம்மலைத் தொடர் சுமார் **1,600** கி.மீ. நீளத்திலும் சுமார் 140 ஆயிரம் கி.மீ. பரப்பளவிலும் அமைந்துள்ளது.

- கேரள மாநிலம் முழுவதும் பரவிக் கிடக்கும் இம்மலை, தமிழ்நாட்டின் நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் அமைந்துள்ளது.

- இமயமலைத் தொடரைக் காட்டிலும், இம்மலைத் தொடர் மிகவும் பழமையானதாகும். இம்மலைத் தொடரை உலகப் பாரம்பரியக் களங்களில் ஒன்றாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) அறிவித்துள்ளது.

## உயிரியல் பன்முகத்தன்மை

unesco

- மேற்குத்தொடர்ச்சி மலையில் சுமார் 7000க்கும் மேற்பட்ட பூக்கும் தாவர வகைகள், 1,700க்கும் மேற்பட்ட பூக்காத தாவர வகைகள், 130க்கும் மேற்பட்ட பாலூட்டி இனங்கள், 400க்கும் மேற்பட்ட பறவை இனங்கள், 200க்கும் மேற்பட்ட ஊர்வன இனங்கள், 150க்கும் மேற்பட்ட நீர், நில வாழ்விகள், 250க்கும் மேற்பட்ட நன்னீர் மீன் வகைகள் மற்றும் 5000க்கும் மேற்பட்ட பூச்சி இனங்கள் உள்ளன.

- மேற்குத்தொடர்ச்சி மலையில் காணப்படும் 650 மர வகைகளில் சுமார் 352 மரங்கள் உள்ளூர் இனத்தைச் சேர்ந்தவையாகும்.

- சிங்கவால் குரங்கு, தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடு, நீலகிரி லாங்கூர் குரங்கு ஆகியவை தமிழ்நாட்டை ஒட்டியுள்ள மலைகளில் வாழ்கின்றன.

- இம்மலைத் தொடரில் உள்ளவற்றில் அழிந்து வரும் விலங்கினங்களின் பட்டியலையும் யுனெஸ்கோ 2012ஆம் ஆண்டில் அளித்துள்ளது. சுமார் **229** தாவர இனங்கள், **31** பாலூட்டி இனங்கள், **15** பறவை இனங்கள், **43** நீர், நில வாழ் உயிரினங்கள், **5** ஊர்வன இனங்கள், **1** மீன் இனம் ஆகியன அழியும் நிலையில் உள்ளனவாம்.

இத்தகைய சிறப்புமிக்க மலைத்தொடரைப் பேணிக் காப்பதில் நம் அனைவரின் பங்கும் அவசியமானது.

# புதிய நூல் அறிமுகம்

## ஆழிப் புதையல்



பூமியில், உயிர்களின் தொட்டில் என்றால் அது கடல்தான். பூமியில் வாழும் உயிரினங்களில் 95 சதவிகிதம் கடலுக்குள்தான் வாழ்கின்றன எனும் தகவல்களோடு பல சுவாரசியமான உயிரினங்களைப் பற்றிச் சொல்கிறது இந்நூல்.

குதிரை, முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும் என்றால் நம்புவீர்களா? அதுவும் பெண் குதிரை முட்டை இட்டு, ஆண் குதிரை குஞ்சு பொரிக்கும் என்பது தெரியுமா? வியப்பாகத்தான் இருக்கும். அது என்ன குதிரை? எங்கு வாழ்கிறது? எப்படி சாத்தியம்? விடை சொல்கிறது இந்நூல்.

ஒரு பறவை தன் வாழ்நாளில் மொத்தமாகப் பயணிக்கும் தூரத்தைக் கணக்கிட்டால், பூமியிலிருந்து நிலவுக்குப் போய்விட்டுத் திரும்பி வரும் தூரத்தைப் போல மூன்று மடங்கு தூரம் இருக்குமாம். அந்தப் பறவை பெயர் என்ன தெரியுமா? அது எங்கு வசிக்கிறது என்று தெரியுமா?

நாம் அறிந்திடாத பல்வேறு தகவல்களை நமக்கு அளிக்கிறது இந்நூல். வாங்கிப் படித்து நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

நூல் : ஆழிப் புதையல்
ஆசிரியர் : நாராயணி சுப்ரமணியன்
ஓவியங்கள் : தீபக் தனஸ்ராஜன்
பக்கங்கள் : 12

## மயிலும் ஒட்டாத சைக்கிளும்

செல்வியும் மயிலும் நெருங்கிய தோழிகள். அவர்களது விளையாட்டுகள்; அவர்களது குறும்புத்தனங்கள்; மயிலுக்குச் செல்வி சைக்கிள் ஓட்டக் கற்றுத் தருவது என இரண்டு சிறுமிகளின் நட்பை, அழகாகக் கதை வழியே சொல்கிறது இந்நூல்.

மயிலின் பாட்டி பழமையான சிந்தனையில் இருப்பவர். மயிலின் வீட்டிற்குச் செல்வி வருவதை வெறுப்பாகவே பார்க்கிறார். செல்வியை அவமதிக்கிறார். எப்போதும் சிடுசிடுவெனக் கோபப்படும் பாட்டி, செல்வியை ஆரத் தழுவிக் கொள்ளும் ஒரு நிலை வருகிறது. அது என்ன சம்பவம் என்பதை அறிய இந்நூலை வாங்கிப் படியுங்கள்.

நூல் : மயிலும் ஒட்டாத சைக்கிளும்
ஆசிரியர் : கி. அமுதாசெல்வி
ஓவியங்கள் : தீபக் தனஸ்ராஜன்
பக்கங்கள் : 8



## இது என்ன மரம்?



சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில், சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் நட்ட மரம் எது? தின்றால் பல் கூசும் காயைத் தரும் மரம் எது? பூச்சிகளை விரட்டும் மரங்கள் எவை? மனிதர்களுக்கு மருந்தாகப் பயன்படும் மரம் எது? குமிழ் போல் காய் தரும் மரம் எது?

முக்கனிகளின் மரங்கள் எவை? என மரங்களின் வகைகளையும் அதன் பயன்களையும் பற்றி இரண்டு சிறுவர்கள் மகிழ்ச்சியாகக் கதை சொல்கிறார்கள். அவை என்னென்ன மரங்கள் என இந்தப் புத்தகத்தில் உள்ளன. படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

நூல் : இது என்ன மரம்?
ஆசிரியர் : ஆதி வள்ளியப்பன்
ஓவியங்கள் : இரா. தியானேஸ்வரன்
பக்கங்கள் : 12

www.Padasalai.Net


அழகியைக் காணவில்லை
கதை : பிரியா குரியன்,
ஓவியங்கள் : பிரியா குரியன்,
தமிழில் : எம். குணவதி
MISSING
MISSING!
அழகி எனும் தான் வளர்த்த எருமையைக் காணவில்லை எனப் புகார் அளித்தார் பாட்டி..
"ஹா... ஹா... எருமைக்குப் பெயர் அழகியா?"
மற்றவர்கள் சிரிக்க, கான்ஸ்டபிள் ஜின்ஸி மட்டும் எருமையை நினைத்துக் கவலைப்பட்டார்.
MISSING!
BEAUTY
ஜின்ஸி உடனடியாக எருமையைத் தேடும் பணியில் இறங்கினார்.
உங்க அழகியைப் பற்றிச் சொல்லுங்க?
"காலையில பால் கறக்கும்போது, அவளோட ரேடியோவுல மேற்கத்திய க்ளாசிக்கல் இசையைக் கேட்பா!"
"புல் மேயும்போது, பல மொழிகள்ல பாட்டுக் கேட்பா."
"குளிக்கும்போதும் தூங்கும்போதும் கூட அழகி பாடல்களைக் கேட்பா"
என்ன ஒரு இசை ரசனை


ஊரில் உள்ளவர்களிடம் அழகியைப் பற்றி விசாரிக்க, அவர்களோ தாங்கள் பார்க்கவில்லை என்றனர்.
பழுதடைந்து கிடந்த லாரியைப் பார்த்தாள் ஜின்ஸி. அங்கே ரேடியோவில் பாடல்கள் ஒலித்தன. லாரியைச் சரி செய்துகொண்டிருந்தவரிடம்,
அழகான கருப்பு எருமையை இந்தப் பக்கம் பார்த்தீங்களா?
நானே கஷ்டப்பட்டு லாரியை சரி பண்ணிட்டு இருக்கேன் நான் ஏன் ரேடியோவுல பாட்டு கேட்கிற எருமையைப் பார்க்க போறேன்.
எங்கு தேடியும் அழகி கிடைக்கவில்லை. 'காணவில்லை' என் போஸ்டர் அடித்து ஒட்டினார் ஜின்ஸி.
BEAUTY
டீக்கடையில் பாடல்கள் ஒலிக்க, ஜின்ஸிக்குப் புதிய ஐடியா தோன்றியது.
லாரி நின்ற காட்டுப் பகுதியில் தேடினாள். அங்கு மின்மினிகளோடு ஒரு ஜோடி கண்கள் தெரிந்தன.
ஜின்ஸி அழகியைக் கண்டுபிடித்துவிட்டாள்.
அவன்தான் திருடன் என எப்படிக் கண்டுபிடித்தாய்?
அவரிடம் எருமையைப் பார்த்தீர்களா என்றுதான் கேட்டேன். அவராக ரேடியோ கேட்கும் எருமை என்று சொல்லி மாட்டிக்கொண்டார்.
நன்றி

# பூமிக்கு நீர் எப்படி வந்தது?




அடிக்குழாய், மோட்டார் வழியே நீரை நாம் பெறுகிறோம். இந்தப் பூமிக்கு முதன்முதலில் நீர் எப்போது வந்தது என்று யோசித்துள்ளீர்களா? நீர் வந்த கதையைப் பார்ப்போம்.



- நீர் என்பது ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் ஆகிய மூலக்கூறுகளால் ஆனது. இரண்டு ஹைட்ரஜன் அணுக்களாலும் ஓர் ஆக்சிஜன் அணுவாலும் ஆனது நீர்.
- இந்தப் பிரபஞ்சத்தின் தொடக்கத்தில் இருந்தது ஹைட்ரஜன் மட்டுமே.
- நட்சத்திரங்களின் அதிக வெப்பத்தால் ஹைட்ரஜன் வேறு சில கூறுகளை உருவாக்கின. அவற்றில் ஒன்றே ஆக்சிஜன். நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறி ஹைட்ரஜன் ஆக்சிஜன் இணைப்பால் உருவானதே நீர்.

**நீர் வந்தது குறித்து ஆய்வாளர்களின் இரண்டு விதமான கருத்துகள்.**

- முன்பிருந்தே பூமியின் ஆழத்தில் நீர் இருந்து, அது காலப்போக்கில் தரைப்பகுதிக்கு வந்திருக்கிறது.
- பூமியின் நிலப்பரப்பில் தொடக்கம் முதலே நீர் இருந்திருக்கிறது என்கின்றனர்.
- சிறு கோள்களும் எரி நட்சத்திரங்களும் பூமியில் விழுந்து நீரின் அளவை அதிகரித்தது எனவும் கூறப்படுகிறது.
- பூமியின் நிலப்பரப்பு 70 சதவிகிதம் நீரால் ஆனது.
- நெப்டியூன், யுரேனஸ் ஆகிய கோள்களிலும் நீர் பனிக்கட்டிகளாக இருக்கிறது.
- பூமியின் தனிச்சிறப்பு அதன் தட்பவெப்பம்தான். சூரியனுக்கு மிக அருகில் பூமி இருந்திருந்தால், வெப்பத்தால் பூமியில் இருக்கும் நீர் எல்லாம் நீராவி ஆகியிருக்கும். நெப்டியூன், யுரேனஸ் போன்று தூரமாக இருந்தால், உறைந்து பனிக்கட்டிகள் ஆகியிருக்கும். பூமி இந்த இரண்டுக்கும் இடையே இருப்பதால்தான் இங்கு நீர் திரவத்தன்மையில் இருக்கிறது.



**2ஆம் பக்க விடைகள்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ம் | மா | லை | க | மே | ணி | ம | ப | சி | அ |
| சா | ப் | பா | டு | ட் | க | ம | சா | ஒ் | ல | க |
| எ | ள | க் | கு | வே | ண் | தா | டா | மே | ப் | ஒ |
| இ | லை | வி | சோ | று | சொ | ந் | ப | சி | ப | மே |
| பா | கு | ண் | ட | ல | கே | சி | ட் | ரி | தி | ம |
| க | ளி | ரா | ஜா | னை | இ | க | டீ | ஏ | கா | த |
| கு | பா | தி | ப | யா | ளை | வ | ளை | டீ | ர | த் |
| வி | தே | ன் | சி | ட் | டு | சீ | ம் | ப | ம் | கு |

**7ஆம் பக்க விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | p | | | | | d |
| | i | | c | | | u |
| s | g | e | u | | | c |
| p | e | a | c | o | c | k |
| a | o | g | k | w | r | |
| r | n | l | o | l | o | |
| r | | e | o | | w | |
| o | | | | | | |
| w | | | | | | |

2) b,
3) d,
4) d,
5) c,
6) a,
7) d,
8) d

**11ஆம் பக்க விடைகள்**

(A)

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | ப | | கு |
| | ணி | | மி |
| தீ | க் | கோ | ழி |
| க் | க | ல | |
| கு | ர | ம் | |
| ச் | டி | | |
| சி | | | |

(B)

[illegible]

(C)


1. வங்கதேசம் - 3
2. மியான்மர் - 2

www.Padasalai.Net

# பட்டுராசு பாவலர்

அந்தச் சிறுவனுக்குப் பாடல்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அந்தப் பள்ளியில் பாட்டுச் சத்தம் கேட்டால் நிச்சயம் அவன்தான் பாடிக் கொண்டிருப்பான். அவன் பாடும் பாடல்களுக்குத் தனி இரசிகர் கூட்டமே இருந்தது. அதனால், அவனைச் சுற்றி நண்பர்கள் எப்போதும் இருந்தார்கள். ஆசிரியர்களும் அவன் பாடலில் மயங்கி இருந்தார்கள். அவனின் இயற்பெயரைச் சொல்லி அழைப்பதை விடவும் 'பட்டுராசு' என்று செல்லப் பெயர் வைத்தே அழைத்தனர்.






பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் என்றால் அந்தச் சிறுவனுக்கு உயிர். தேடித் தேடிப் படிப்பான். அக்கவிதைகளின் கருத்தைப் புரிந்துகொண்டு படிப்பதோடு பாடியும் பார்ப்பான். பாரதிதாசனை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அந்தச் சிறுவனுக்குக் கிடைத்தபோது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பாரதிதாசனிடம் தான் எழுதிய கவிதைகளைப் படித்துக் காட்டினான். வியந்துபோன அவர், பாராட்டி, ஊக்கப்படுத்தினார். அவனின் இலக்கியம் வளமாக இருந்தது. ஆனால், பல்வேறு இன்னல்களைச் சந்தித்த பிறகே அவனுக்குக் கல்லூரியில் படிக்கும் சூழல் அமைந்தது.

மனம் முழுக்கப் பாடல்களால் நிறைந்து இருந்தவர் வேறு யாருமல்ல, எழுத்தாளர், கவிஞர் தமிழ்ஒளி தான். இவரின் இயற்பெயர் விசயரங்கம். எளிமையான மக்களைப் பற்றியே அதிகம் சிந்தித்தார். அவற்றையே தன் படைப்புகளிலும் எழுதினார். ஒடுக்கப்பட்ட மக்களின் வலியைச் சொல்லும் 'வீராயி' அவரின் படைப்புகளில் குறிப்பிடத் தகுந்தது. குழந்தைகளை நேசித்த தமிழ்ஒளி, சிறுவர்களுக்காக 60க்கும் மேற்பட்ட பாடல்களையும் சின்னச் சின்னக் கதைகளையும் எழுதியுள்ளார். 'ஒரு கவிஞன் வாழ்ந்ததற்கு அடையாளமே அவனுடைய படைப்புகள்தாம்' என்று சொன்ன விசயரங்கம் என்கிற தமிழ்ஒளி 1965ஆம் ஆண்டு காலமானார்.




தமிழ்ஒளி



# பலா

பலாச் சுளை என்றால் உங்களுக்கு மிக விருப்பம் அல்லவா? தமிழ்நாட்டின் மாநிலப் பழமான இது முக்கனிகளில் நடுநாயகமாக உள்ளது.



- பலா மரம் முதன்முதலில் உருவானது இந்தியாவில்தான். அதன் பின்னர் இலங்கை, பர்மா, மலேசியா போன்ற நாடுகளுக்கும் பரவியது.

- பலா மரம் சுமார் 20 மீட்டர் உயரம் வரை வளரும். பலாமரப் பட்டை, இலை ஆகியவற்றை ஒடித்தால் வெள்ளை நிறத்தில் பிசின் போன்ற பால் வடியும்.

- பூங்கொத்துகள் அடி மாத்திலும் கிளைகளிலும் வளரும். இவை முற்றிக் கனியாகும். கனியின் புறத்தோல் கடினமாக இருக்கும். முள்ளைப் போன்ற கூரிய முனைகளைக் கொண்டிருக்கும்.

- பலாச் சுளையில் புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட் ஆகிய சத்துகளும், விட்டமின் ஏ, சி ஆகியவையும் உள்ளன. சுளையினுள் பெரிய விதை உள்ளது. இதிலும் கொழுப்பு, கார்போஹைட்ரேட், புரதம் ஆகியவை உள்ளன. இதில் விட்டமின் பி இருக்கிறது.


- விதையைச் சுட்டும் வறுத்தும் வேக வைத்தும் உண்ணலாம். பலாப் பிஞ்சைக் கறி சமைத்தால் சுவையாக இருக்கும்.

- பலா மரம், மரப் பொருட்கள் செய்யவும் பயன்படும். இம்மரத்தில் செய்யப்படும் பொருட்கள் எளிதில் தேயாது. வீணை போன்ற இசைக்கருவிகள் செய்யவும் பலா மரம் உதவும்.

- பலாப்பழம் வெப்பமண்டல கால நிலையைத் தாங்கும் திறன் கொண்டதால், பல ஏழை நாடுகளில் உள்ள மக்களின் கலோரிகள் மற்றும் கார்போஹைட்ரேட் தேவைகளுக்கு முக்கிய ஆதாரமாக உள்ளது.

- பலாப்பழம் வெப்பமண்டலப் பகுதிகளில் பயிரிடப்பட்டாலும், அமெரிக்கா உட்பட உலகின் பிற பகுதிகளிலும் இது பரவலாகக் கிடைக்கிறது. இது கோடை காலத்தில் கனி தரும் மரமாகும்.

- பலாப்பழத்தில் உண்ணக்கூடிய பகுதி சதை அல்லது பழம். காய்கள் ஆகும். அவை பழுத்த, பழுக்காத போதும் உண்ணலாம். விதைகளும் சாப்பிடப் பாதுகாப்பானவை.



# இந்த இதழ்கள் உங்கள் வீட்டிற்கு வரவேண்டுமா?





**உங்களுக்குப் பிடித்த**

**ஊஞ்சல், தேன்சிட்டு**

**இதழ்கள் உங்கள் வீடுகளுக்கு நேரடியாக வர வேண்டுமா?**

இந்த QR- Code ஐ ஸ்கேன் செய்து உடனே சந்தாதாரர் ஆகுங்கள்



Then Chittu Fortnightly Registered with RNI No. TNTAM/2022/82345
Postal Registration No. TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No. TN/PMG(CCR)/WPP-676/22-24
Published on 01st & 16th of every month
Posted between 16-20 August 2024 Posted at Egmore RMS/ Patrika Channel
இதழ் 42


# ஆகஸ்ட் 16-31 பிறந்தவர்கள்

## ராஜீவ் காந்தி



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1944ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் ஆரோக்கியமான மாற்றங்கள் நடந்தன. இவரது பிறந்த நாள் சமய நல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்கப் படுகிறது. (20)

## நாராயண குரு



கேரளாவின் 'மறுமலர்ச்சித் தந்தை' எனப் போற்றப்படுபவர் நாராயண குரு. இந்திய அளவில் கொண்டாடப்படும் சமூக சீர்திருத்தவாதிகளுள் ஒருவர். கேரளாவின் செம்பழந்தி என்னும் சிற்றூரில் 1856ஆம் ஆண்டு பிறந்தார். சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். தன் கொள்கைகளை வலியுறுத்தும் பல நூல்களை எழுதியுள்ளார். (20)

## அன்னை தெரசா



அல்பேனிய நாட்டில் பிறந்து இந்திய மக்களுக்காக வாழ்ந்தவர் அன்னை தெரசா. குறிப்பாக, நோயால் அல்லல்பட்ட இந்திய மக்களுக்குத் தாயாக இருந்து மருத்துவச் சேவை ஆற்றினார். இவரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் போற்றும் வகையில் அமைதிக்கான நோபல் பரிசு 1979ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இந்திய அரசு பாரத ரத்னா விருது அளித்து கௌரவப்படுத்தியது. (26)

## தியான் சந்த்



ஹாக்கி விளையாட்டில் புகழ் பெற்ற வீரராகத் திகழ்ந்தவர் தியான் சந்த். இவர் 1905ஆம் ஆண்டு பிறந்தார். இந்திய ஹாக்கி விளையாட்டின் முன்னோடி வீரர் இவர். 1928, 1932, 1936 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் இந்திய ஹாக்கி அணி ஹாட்ரிக் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தார். இதுவரை இவர் சிறப்பாக ஆடி 570 கோல்கள் அடித்துள்ளார். (29)

# சிறப்பு தினங்கள்

## உலக மனிதநேய தினம்




பிரேசில் நாட்டைச் சேர்ந்தவரும், 37 ஆண்டுகள் ஐ.நா. சபையின் மனிதநேயப் பணிகளில் பணியாற்றியவருமான செர்ஜியோ வியேரா டி மெல்லோ 2003ஆம் ஆண்டு ஈராக்கில் வெடிகுண்டு விபத்தில் இறந்தார். அவரின் நினைவாக ஐ.நா. சபையின் சார்பாக ஆகஸ்ட் 19 அன்று உலக மனிதநேய தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. (19)

## தேசிய விண்வெளி தினம்

இந்திய விண்வெளி ஆய்வு மையம் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 அன்று சந்திரனின் தென்துருவப் பகுதியில் சந்திரயான் –3 விண்கலத்தை வெற்றிகரமாகத் தரையிறக்கியது. இந்தச் சாதனையை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்நாள் தேசிய விண்வெளி தினமாகக் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

## உலக நாய் வளர்ப்பு தினம்




நாய்களுக்கும், மனிதர்களுக்கும் இடையிலான பிணைப்பைக் கொண்டாடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 26 அன்று சர்வதேச நாய் தினம் கொண்டாடப்படுகிறது. விலங்குகள் நல வழக்கறிஞர் கொலின் பைஜ் என்பவரால் நாய்கள் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த 2004ஆம் ஆண்டு முதல் இந்நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. (26)

உங்களுக்கு தேன்சிட்டு
இதழ் பிடித்திருக்கிறதா?
நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.